உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 22.08.2026 • மலர் 04 • இதழ்: 234 • சனி • Edition : Nagercoil • 22.08.2026 • Vol : 04 • Issue : 234 • Page : 4 • Rs. 5/-

## ஆதவ் அர்ஜூனா Vs உதயநிதி:

# பேரவையில் தொகுதி மறுவரையறை விவகாரத்தில் பேசியது என்ன?



சென்னை: தொகுதி மறுவரையறை விவகாரத்தில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் இடையே பேரவையில் காரசார விவாதம் நடந்தது.

சட்டப்பேரவையில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசுகையில், "நேற்று நடைப்பெற்ற தென்மண்டல முதல்வர்கள் மாநாட்டில் தொகுதி மறுவரையறை குறித்து முதல்வர் விஜய் பேசியது குறித்து சில ஊடகங்கள், சில கட்சிகள் போலி பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றன. 'ஃபேர் டிலிமிட்டேஷன்' (FAIR DELIMITATION) தேவையில்லை 'ஃப்ரீஸ் டிமிலிட்டேஷன்' (FREEZE DELIMITATION) தான் தேவை. 543 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றம்தான் நீடிக்க வேண்டும் என தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் முதல்வர் விஜய்யும், அரசும் உறுதியாக இருக்கிறது" என்று அவர் பேசினார்.

இதைத் தொடர்ந்து பேசிய, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், "தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் முதல்வர் பேசிய உரை குறித்து அமைச்சர் பேசினார். 543 எம்பிக்கள் என்ற எண்ணிக்கையில் இருக்கவேண்டும் என்றுதான் தீர்மானத்தில் உள்ளது. அந்த தீர்மானத்தைத்தான் பேரவையில் நிறைவேற்றியுள்ளோம். இந்த எண்ணிக்கை அதிகரிக்கலாமே தவிர குறையக் கூடாது. தமிழகத்தின் தொகுதி விகிதாச்சாரத்தின் சதவீதம் 7.18 என்ற அளவிலேயே தொடர வேண்டும். ஆனால், முதல்வரின் நேற்றைய உரையை 543 என்ற எண்ணிக்கையை ஃப்ரீஸ் (FREEZE) செய்ய வேண்டும் என எந்த இடத்திலும் இடம்பெறவில்லை என்பதைகவனத்துக்கு கொண்டு வருகிறேன்" என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "தொகுதி மறுவரையறை விவகாரத்தில் அரசியல் பசப்பு வார்த்தைகள் எல்லாம் வேண்டாம். தமிழகத்துக்கு 50 சதவீதம் அதிகமாக எம்.பிக்கள் தருகிறோம் என மத்திய அரசு சொன்னாலும் அதனை நாம் எதிர்க்க வேண்டும். அன்றைய காலத்தில், வாஜ்பாய் அரசு எப்படி 543 எண்ணிக்கையை ஃப்ரீஸ் (FREEZE) செய்தார்களோ, அதே போல சிறப்பு சட்டத்தை தான் கொண்டுவர வேண்டும். அதுக்குத் தான் பேரவையில் தீர்மானமும் கொண்டு வந்துள்ளோம்.

தமிழகம் வலியுறுத்திய நீட் விலக்கு உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காத ஒன்றிய அரசு, கோரிக்கையே வைக்காத போது தமிழகத்தில் நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது என்றால், அதில் கண்டிப்பாக அரசியல் இருக்கும். ஒன்றிய அரசு 50 சதவீதம் கொடுப்போம் எனக் கூறினாலும், திமுக உடன்படக் கூடாது. மாநில உரிமைக்காக அனைவரும் ஒன்றுபட வேண்டாம். தமிழகத்தின் உரிமைகளுக்காக திமுக போராடி இருக்கிறது. அவர்கள் செய்த நல்ல விஷயங்களைநாங்கள்இல்லை என்று சொல்லவில்லை" என்றார்.

## பழம்பெரும் நடிகை சௌகார் ஜானகி மறைவு

பழம்பெரும் நடிகை சௌகார் ஜானகி (94), வயோதிகம் சார்ந்த உடல்நலக்குறைவால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், 21.08.2026 காலமானார்.

1931ல் ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியில் பிறந்த இவர், 19வது வயதில் 'சௌகார்' என்ற தெலுங்கு திரைப்படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் 385க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். 'பாக்கியலட்சுமி', 'படிக்காதமேதை', 'பாலும் பழமும்', 'பார் மகளே பார்', 'புதிய பறவை', 'நீர்க்குமிழி', 'எதிர் நீச்சல்', 'இரு கோடுகள்', 'தில்லுமுல்லு' உள்ளிட்ட திரைப்படங்கள்அவரதுசிறந்தநடிப்பை வெளிப்படுத்தின.

மேடை நாடகங்களிலும் சிறந்து விளங்கிய அவர், திரைப்படங்களையும் தயாரித்துள்ளார். கலைமாமணி உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்ற சௌகார் ஜானகிக்கு, கலைச் சேவையைப் பாராட்டி 2022ம் ஆண்டுக்கான பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

## கன்னியாகுமரியில் தொடர் கொள்ளை 6 பேர் கொண்ட கும்பல் கைது; ஆயுதங்கள் பறிமுதல்

கன்னியாகுமரி, ஆக. 22

கன்னியாகுமரி சுற்று வட்டார பகுதிகளில் சமீப காலமாக தொடர் கொள்ளை சம்பவங்கள் நடந்து வருகின்றன. கொட்டாரம் ராமர் கோவிலில் உண்டியல் கொள்ளையடிக்கப்பட்டது. ஆளில்லாத வீட்டிலும் இது போன்று கொள்ளை முயற்சி நடந்தது. சமீபத்தில் மகாதானபுரத்தில் நான்கு கடைகளில் அடுத்தடுத்து ஒரே நாளில் கொள்ளை சம்பவங்கள் நடந்தது. இதே போல் கடந்த தினம் ஆந்திர மாநிலம் நெல்லூர் பகுதியை சேர்ந்த சமாதி மாதவா சமந்து (33) என்பவர் கன்னியாகுமரியை சுற்றி பார்க்க நண்பர்களுடன் வந்த போது கன்னியாகுமரி சன்செட் பாயிண்ட் அருகே வைத்து பைக்கில் வந்த கும்பல் அவரிடமிருந்து தங்க நகைகளை பறித்து சென்ற சம்பவம் நடைபெற்றது.

இந்த சம்பவங்கள் குறித்து கன்னியாகுமரி போலீசில் புகார் அளிக்கப்பட்டது. போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். தொடர் கொள்ளை தொடர்ந்து தனிப்படையும் அமைக்கப்பட்டது. கண்காணிப்பு கேமராக்களை போலீசார் ஆய்வு செய்து மேலும் இரவு நேர ரோந்து பணியும் தீவிர படுத்தப்பட்டது.

இந்த நிலையில் கன்னியாகுமரியில் நேற்று முன்தினம் இரவு போலீஸார் ரோந்து பணியில் இருந்தனர். அப்போது மெயின் ரோட்டில் சந்தேகத்துக்குரிய வகையில் ஆறு பேர் நின்றிருந்தனர். அவர்களின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த போலீசார் விசாரணைக்காக அவர்களை அழைத்த போது அவர்கள் அங்கிருந்து தப்பி ஓட முயன்றனர். உடனடியாக போலீசார் அவர்களை சுத்தி வளைத்து பிடித்தனர். விசாரணையில் அவர்கள் ஆறு பேரும் கன்னியாகுமரி மற்றும் தென் தாமரைகுளம் பகுதியை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது.

பின்னர் காவல் நிலையம் கொண்டு சென்று விசாரித்தனர். மேலும் அவர்களிடமிருந்து மங்கி குல்லா, ஆயுதங்கள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டது. பின்னர் அவர்களை போலீசார் கைது செய்தனர். இவர்களில் ஒருவர் இளம் சிறார் ஆவார். மீது ஐந்து பேரான கணேஷ், ஹரிஹரன், ஜெர்ரி, பூவாஸ், சிவப்பிரகாஷ் ஆகியோரை போலீசார் கைது செய்தனர். இவர்களுக்கு வேறு கொள்ளை சம்பவத்தில் தொடர்பு உண்டா என்ற கோணத்தில் விசாரணை நடக்கிறது. மேலும் இவர்கள் ஆந்திர வாலிபர் இடம் நகை பறித்தவர்கள் என்ற விவரமும் தெரிய வந்துள்ளது. தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை சார்பில், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்ட மருத்துவமனை திட்டப்பணிகள் குறித்த மாவட்ட அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.விஷு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




## பெண்களுக்கான மார்பக புற்றுநோய் கண்டறியும் நடமாடும் வாகனம் துவக்க விழா

கோவை ஆக:22

கோவை பி எஸ் ஜி மருத்துவமனை B பிளாக் வளாகத்தில் பன்னாட்டு லயன்ஸ் சங்கங்கள் 3 2 4 2 C மாவட்டத்தின் சார்பாக பெண்களுக்கான மார்பக புற்றுநோய் கண்டறியும் நடமாடும் வாகனம் துவக்க விழா நடைபெற்றது.

இந்த சேவை திட்டமானது லயன்ஸ் மாவட்டம் 3242 C நிதி உதவிகளும், அருணா அபை ஆஸ்வால் அறக்கட்டளை, கிராப்ஸ் மேன் ஆட்டோமேஷன் நிறுவனத்தின் சமூக மேம்பாட்டு நிதி உதவி மற்றும் பி எஸ் ஜி மருத்துவமனை தொழில்நுட்ப உதவியாளும் நிறைவேற்றப்பட்டது.

இவ்விழாவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முன்னாள் மாவட்ட ஆளுநர் இந்திய மருத்துவ சங்கத்தின் முன்னாள் தமிழ் மாநில தலைவர் லயன் ஆர் பழனிசாமி அனைவரையும் வரவேற்றார்.

லயன்ஸ் மாவட்டம் 3242 C ஆளுநர் லயன் பி.எஸ்செல்வராஜ், திட்ட தலைவர் லயன் ஆர்.நித்தியானந்தம், முதன்மை விருந்தினர் பன்னாட்டு இயக்குனர் லயன் எஸ். டி.சீனிவாசன் சிறப்பு விருந்தினர்கள் முன்னாள் பன்னாட்டு இயக்குனர் லயன் அருணா ஆஸ்வால் பிஎஸ்ஜி புற்றுநோய் மருத்துவமனையின் இயக்குனர் டி.பாலாஜி, கிராப்ஸ் மேன் ஆட்டோமேஷன் நிறுவனத்தின் தலைவர் சீனிவாசன் ரவி கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்

மேலும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் பன்னாட்டு இயக்குனர்கள் லயன் ஜி.ராமசாமி, லயன் எம். நாகராஜன், லயன் கே.தனபாலன், லயன் ஆர்.மதனகோபால் மற்றும் பொள்ளாச்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகசுந்தரம், கூட்டு மாவட்ட தலைவர் லயன் டி.செல்வம், கூட்டு மாவட்ட செயலாளர் லயன் இ. விஸ்வநாதன், கூட்டு மாவட்ட பொருளாளர் லயன் ஏ.ராஜசேகர் 3242 சி மாவட்டத்தின் முதலாம் துணை அட்வகேட் சூரி. நந்தகோபால், இரண்டாம் துணை ஆளுநர் லயன் பி.என். பாஸ்கர், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் லயன் எம். ஜீவானந்தம், லயன் சாரதா மணி பழனிசாமி, முன்னாள் கூட்டு மாவட்ட தலைவர், ஆர் என் கருணாநிதி லயன் என் நடராஜன், லயன் எஸ் ராம்குமார், ஜி எம் டி ஒருங்கிணைப்பாளர் லயன் எஸ் செந்தில்குமார் மற்றும் மருத்துவமனை நிர்வாகிகளும் லயன்ஸ் நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவை பிஎஸ்ஜி மருத்துவமனையின் திரு ஜானகிராம் லயன் சி முத்துசாமி ஒருங்கிணைத்தனர். என்பது குறிப்பிடத்தக்கது.

## நாகர்கோவிலில் எயிட்ஸ் விழிப்புணர்வு பேரணி மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தார்




நாகர்கோவில், ஆக.22

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலக முகப்பில் தீவிரப்படுத்தப்பட்ட IEC விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், நேற்று 21. ம் தேதி கொடியசைத்து துவக்கி வைத்தார். பின்னர் அவர் கூறியதாவது:

எயிட்ஸ் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படும் நோக்கத்தில் தீவிரப்படுத்தப்பட்ட கிராமியகலை விழிப்புணர்வு பிரச்சாரம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சாரத்தின் நோக்கம் பொதுமக்களிடையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை அதிகரித்து, எச்.ஐ.வி பரிசோதனையை ஊக்குவித்தலே யாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தலைமை மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், தனியார் மருத்துவமனை, நடமாடும் நம்பிக்கைமையம் உள்ளிட்ட இடங்களில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் செயல்பட்டு வருகிறது.

மேலும் சுகவாழ்வுமையங்கள், கூட்டுமருத்துவ அரசு இரத்த வங்கிகள், சிகிச்சை மையம், ஏ.ஆர்.டி மையம், தொண்டு நிறுவனங்கள், இளைப்பாறும் மையம் ஆகியவை எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு பணியில் ஈடுப்பட்டு வருகின்றது.

எய்ட்ஸ் நோய் குறித்த சரியான புரிதலும் விழிப்புணர்வுமே அதைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வழியாகும். எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களைச் சமுதாயத்தில் பாகுபாடு இன்றி நடத்த வேண்டும். அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் இலவச பரிசோதனை மற்றும் ஆலோசனைகளை பொதுமக்கள் தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

முன்னதாக எச்.ஐ.வி/எய்ட்ஸ் கிராமிய விழிப்புணர்வு கலைநிகழ்ச்சியினை கலெக்டர் கண்டு களித்தார். இக்கிராமிய விழிப்புணர்வு நிகழ்வானது தீக்ஷா மற்றும் பழனியாப்பிள்ளை கலைக்குழுவினரால் 8 நாட்களுக்கு 32 கிராமங்களில் நடைபெற உள்ளது. தொடர்ந்து எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு வாசக ஒட்டுவில்லைகளை ஆட்டோக்களில் ஒட்டி, இலட்சினையினை கலெக்டர் வெளியிட்டார். நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி)ர. மோனிகா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ். நமச்சிவாயம், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.லியோ டேவிட், இணை இயக்குநர் குடும்ப நலத்துறை மரு. ரவிக்குமார், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலக மாவட்ட மேற்பார்வையாளர் திரு. எம்.ஜெயகுமார், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி உறைவிட மருத்துவர் மரு. விஜயலெட்சுமி, மாணவ மாணவியர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (21.08.2026) நடைபெற்றது. இக்கூட்டத்தில் 16 விவசாயிகளுக்கு கணினி திருத்த பட்டாக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

# திருவள்ளூர் அருகே பால் வியாபாரத்தில் தொழில் போட்டி: 2 பேருக்கு சரமாரி அடி உதை

திருவள்ளூர்

கீழ்நல்லாத்தூர் பகுதியைச் சேர்ந்த ஐஸ்வர்யா, தனது குடும்பத்தினருடன் திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தார்.

அதில், தனது கணவர் விக்னேஷ், அவரது அண்ணன் கார்த்திக் மற்றும் மாமனார் பாண்டுரங்கன் ஆகியோர்கீழ்நல்லாத்தூர் பகுதியில் சுமார் 20 மாடுகள் வளர்த்து, கிராம மக்களின் மாடுகளில் பால் கறந்து பால் வியாபாரம் செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அதே பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன் மற்றும் வினோத் ஆகியோர் தொழில் போட்டி காரணமாக தங்களுடன் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்ததாகவும் கூறியுள்ளார். நேற்று மாலை இருவரும் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து கார்த்திக்கை தகாத வார்த்தைகளால் பேசி, கட்டையால் தாக்கியதுடன், கைகளாலும் சரமாரியாக தாக்கி கீழே தள்ளியதாக புகாரில் தெரிவித்துள்ளார்.

இதில் கார்த்திக்கின் இடது கால், மார்பு மற்றும் முதுகுப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. மேலும், பாண்டுரங்கனையும் தாக்கியதாகவும், இருவரும் தற்போது திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் போட்டி காரணமாக தாக்குதலில் ஈடுபட்ட கிருஷ்ணன் மற்றும் வினோத் மீது வழக்குப்பதிவு செய்து, அவர்களை கைதுசெய்துநடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐஸ்வர்யா காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

# விளாத்திகுளத்தில் ஆசிரியர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




விளாத்திகுளம் ஆகஸ்ட் 22.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் உள்ள வட்டார கல்வி அலுவலகம் முன்பு தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழுவான டிட்டோஜாக் சார்பில் 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்துதல், ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை களைதல், சிறப்பு ஆசிரியர் தகுதித்தேர்வு தொடர்பான கோரிக்கைகள், அரசாணை எண் 243 ஐ ரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழக ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் ஜீவானந்தம் தலைமை வகித்தார். கோவில்பட்டி கல்வி மாவட்ட தலைவர் ரவீந்திரராஜன், முன்னிலை வகித்தார். தமிழக ஆசிரியர் கூட்டணி தலைவர் சேர்மகனி, தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தலைவர் இப்ராகிம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி பொதுச்செயலாளர் மயில் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். அப்போது பேசிய ஆசிரியர் ஒருவர் ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்வது போல் அரசு செயல்படுகிறது ஊரான் வீடு என்பது மக்களின் வரிப்பணம் தான். கஜானா காலி இல்லை, நிறைவாகவே உள்ளது. மனம் இருந்தால் ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றலாம் எனக்கூறி அரசுக்கு கண்டனம் தெரிவித்தார்.

# பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் ஆட்சியர் பங்கேற்பு



தருமபுரி, ஆகஸ்ட் 22:

பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவில் நடைபெற்று வரும் 'உங்களைத் தேடி உங்கள்ஊரில்'திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் சரவணன் பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

பி.பள்ளிப்பட்டி, மஞ்சவாடி ஊராட்சிகளில் புதிய குளங்கள் அமைக்கும் பணிகளை பார்வையிட்ட அவர், பாப்பிரெட்டிப்பட்டியில் புதிய உழவர் சந்தை அமைப்பதற்கான இடத்தையும் ஆய்வு செய்தார். தொடர்ந்து தொங்கனூர் முதல் பட்டுக்கோணம் பட்டி வரையிலான சாலையை ரூ.75 லட்சம் மதிப்பில் பலப்படுத்தும் பணியையும் பார்வையிட்டார்.

நடுப்பட்டி அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் வகுப்பறைகள், குடிநீர், மின்சாரம், கழிவறை, மாணவர்கள் தங்கும் வசதி, பதிவேடுகள் மற்றும் உணவின் தரம் குறித்து ஆய்வு செய்தார். மாணவர்களுடன் கலந்துரையாடி கல்வி குறித்தும் கேட்டறிந்தார். பின்னர் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் வருகை, உணவு மற்றும் பொருட்களின் இருப்பை ஆய்வு செய்தார்.

மஞ்சவாடியில் நடைபெற்ற மலைவாழ் மக்களுக்கான சிறப்பு முகாமில் பட்டா, வாரிசு சான்றிதழ், குடும்ப அட்டை உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், பொதுமக்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும், அரசு நலத்திட்டங்கள் தகுதியானவர்களை சென்றடைவதை உறுதி செய்யவும் ஆட்சியர் அறிவுறுத்தினார். குடிநீர், சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை விரைந்து நிறைவேற்றவும் உத்தரவிட்டார்.

# ஈரோடு மாவட்ட மாஸ்டர்ஸ் தடகள சங்கம் சார்பாக போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி

ஈரோடு ஆக 21

ஈரோடு மாவட்ட மாஸ்டர்ஸ் தடகள சங்கம் சப்பாக போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நாளை மறுநாள் (ஞாயிற்றுகிழமை) காலை 6.00மணிக்கு ஈரோடு ரயில்வே இனஸ்டிடியூட் வளாகத்தில் நடைபெற உள்ளது.தமிழக மாஸ்டர் தடகள சங்கத்தின் வழி க ா ட் டு த லின் ப டி போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டியானது முதல்முறையாக நடைபெறுகிறது இப்போட்டியை இந்த மராத்தான் போட்டியில் 7 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவமாணவிகள், 8 முதல் 10 வயதிற்குட்பட்ட மாணவமாணவிகள் 11 வயது முதல் 15 வயதிற்குட்பட்ட மாணவமாணவிகள் மற்றும் மாஸ்டர்ஸ் பிரிவில் 30 வயது முதல் 50 வரை உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள், 51 வயதிற்குமேல் அனைவரும் இப் போ ட் டி யி ல் பங்கேற்கலாம். முறையாக 1கிமீ. 2கிமீ, 3கிமீ என்ற போட்டி தூரத்தை நிர்ணயித்து இந்த மராத்தான் நடைபெற உள்ளது. இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் பங்கேற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்து வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத்தொகையும் பதக்கங்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும் இப்போட்டியில் பங்குபெறும் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் சான்றிதழ், பதக்கங்கள், மருத்துவ உதவிகள் போன்றவை வழங்க ப் ப டு கி ற து . இப்போட்டியை ஈரோடு மாவட்ட மாஸ்டர்ஸ் தடகள சங்கத்தின் நிர்வாகிகள் ஏற்பாடு செய்து உள்ளனர். இப்போட்டியில் பங்குபெறுவோர் சிவசங்கரன் தலைவர் 9080738093, தங்கவேலு செயலாளர் 9360561739, துணை செயலாளர் முனைவர் கருணாநிதி 9344277587 ஆகியோரிடம் பதிவு செய்து கொள்ளலாம் .




# ஆத்துப்பாளையத்தில் தடுப்புச் சுவர்கள் சேதம்: தண்ணீரின்றி விவசாயிகள் வேதனை

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகே தடுப்பு சுவர் உடைந்ததில் பெனுகொண்டா ஏரியில் இருந்து பாம்பாறு அணைக்கு செல்லும் நீர்வழித்தடத்தில் கடந்த 2007–2008ஆம் ஆண்டில் கட்டப்பட்ட தடுப்புச் சுவர்களில் சுமார் 30 கும் மேற்பட்ட தடுப்புச் சுவர்கள் சேதமடைந்துள்ளன. இதனால் மழைக்காலங்களில் வரும் தண்ணீர் தேங்காமல் அப்படியே வெளியேறி, விடுகிறது சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. அந்தேரிப்பட்டி, குன்னத்தூர், எட்டுப்பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகளின் கிணறுகள் வறண்டு காணப்படுகிறது இதனால், கரும்பு, வாழை, மஞ்சள், தென்னை, மா உள்ளிட்ட பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பல லட்சம் ரூபாய் இழப்புகள் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் வேதனை தெரிவித்தனர். சேதமடைந்த தடுப்புச் சுவர்களை அகற்றி, புதிய தடுப்புச்சுவர்கள் அமைக்க என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# குடியாத்தத்தில் கணவன்மனைவிக்கு கொலை மிரட்டல்: நிருபர் கைது



வேலூர், ஆக. 22

குடியாத்தத்தில் பெண்ணை ஆபாசமாக பேசி, ஆசிட் வீசிகொலை செய்து விடுவதாகவும், அவரது கணவரை கொலை செய்து விடுவதாகவும் மிரட்டியதாக அளிக்கப்பட்ட புகாரில் நிருபர் கைது செய்யப்பட்டார். கணவன், மனைவி தனித்தனியாக அளித்த புகார்களின் அடிப்படையில் போலீசார் இரண்டு வழக்குகளை பதிவு செய்துள்ளனர்.

மேல்பட்டி அருகே செ ண் ட த் தூ ர் கிராமத்தைச் சேர்ந்த கல்யாணி என்கிற மோனிஷா (32), குடியாத்தம் நகர காவல் நிலையத்தில் அளித்த புகாரில், தூரத்து உறவினரான பெரும்பாடி கிராமத்தைச் சேர்ந்த தினேஷ்குமார் (32) என்பவர் தனக்கு அரசு இலவச வீட்டுமனை பட்டா வாங்கித் தருவதாக கூறி ரூ.2 லட்சம் பெற்றதாக தெரிவித்துள்ளார்.

பட்டா கிடைத்த பின்னர், போலியான சர்வேயர்களை அழைத்து வந்து நிலத்தை அளந்ததாகவும், பணத்தை திரும்பக் கேட்டபோது தன்னை ஆபாசமாக பேசி, ஸ்கூட்டர் சாவியால் தாக்கியதாகவும், ஆசிட் வீசி கொலை செய்வதாக மிரட்டியதாகவும் புகார் தெரிவித்துள்ளார். மேலும் தனது கணவரையும் கொலை செய்வதாக மிரட்டுவதாக கூறியுள்ளார்.

இதேபோல் அவரது கணவர் சரவணன் (34), தினேஷ்குமார் தன்னை வழிமறித்து ஆபாசமாக திட்டி, பாக்கெட்டில் இருந்து ரூ.2 ஆயிரம் எடுத்துக்கொண்டு கொலை மிரட்டல் விடுத்ததாக புகார் அளித்தார்.

இரு புகார்களின் பேரிலும் போலீசார் தனித்தனியாக வழக்குப்பதிவு செய்து, தினேஷ்குமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.



# வேலூரில் விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில் பரபரப்பு

## அரை நிர்வாணமாக வந்து விவசாயி ஆவேசம்

வேலூர், ஆக. 22: வேலூர் சத்துவாச்சாரியில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கலெக்டர் லீலா அலெக்ஸ் தலைமையில் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ் உள்ளிட்ட அதிகாரிகளும், ஏராளமான விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயி ஒருவர் அரை நிர்வாணமாக பங்கேற்று, அனைத்து விவசாயக் கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வே ண் டு ம் , சீமைக்கருவேல மரங்களை அகற்ற வேண்டும், ஆறுகளில் நடைபெறும் மணல் கொள்ளையை தடுக்க வேண்டும் என வலியுறுத்தி பேசினார். இதனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

விவசாயிகள் பேசுகையில், வேளாண் கடன் தள்ளுபடி கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி வருவதாகவும், கூட்டுறவு வங்கி அதிகாரிகள் கடனை வசூலிக்க தொடர்ந்து வற்புறுத்துவதாகவும் தெரிவித்தனர். அரசு தெளிவான முடிவு எடுக்கும் வரை கடன் வசூலிப்பதை நிறுத்த வேண்டும் என்றும், வட்டி கேட்டு விவசாயிகளை தொந்தரவு செய்யக்கூடாது என்றும் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், விவசாயிகள் கடனைதிருப்பிச்செலுத்த முடியாதநிலையில் இருப்பதாக வேதனை தெரிவித்த சிலர், "எங்களை கருணை கொலை செய்து விடுங்கள்" என உருக்கமாக பேசினர். ஆறுகளில் தொடரும் மணல் கொள்ளையை தடுக்காவிட்டால் கடுமையான போராட்டங்களில் ஈடுபடுவோம் என்றும் எச்சரித்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி நேற்று விவசாய பெருமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# இறச்சகுளம் சந்திப்பில் உலக ஊழல் தடுப்போர் கூட்டமைப்பு இயக்கத்தின் விழிப்புணர்வு கூட்டம்



இறச்சகுளம் சந்திப்பில் உலக ஊழல் தடுப்போர் கூட்டமைப்பு இயக்கத்தின் விழிப்புணர்வு கூட்டம்

இந்த கூட்டமானது நடந்தது.

கூட்டத்திற்கு நிறுவனத் தலைவர்ஆன்றனி மைக்கேல் தலைமை தாங்கி ஊழல் தடுப்பு பற்றிய கருத்துக்களை எடுத்துரைத்தார், மாவட்ட இணை செயலாளர் ராஜன் கல்குளம் வட்டாரத் தலைவர் கோபாலகிருஷ்ணன் தோவாளை வட்டாரத் தலைவர் மாணிக்கவாசகம் முன்னிலை வகித்தனர், தடிக்காரன் கோணம் ஊராட்சி தலைவர் ஜெயபிரதாப் சிங் வரவேற்று பேசினார், மாவட்ட பொதுச் செயலாளர்திட்டைசுந்தர்இயற்கை பாதுகாப்பு பற்றி விளக்க உரையாற்றினார், மகளிர் அணி செயலாளர் ஜோதி பாய் அறம் வளர்க்கும் விதம் குறித்து உரையாற்றினார், கோட்டாறு யூசுப் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றி விளக்கினார்.

நிர்வாகிகள் உள்பட ஊர் மக்கள் பலர்கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் மாவட்ட துணை செயலாளர் ஜெரோம் பிரதாப் சிங் நன்றி கூறினார்.

# நல்லாட்சி, ஊழல் தடுப்பு மற்றும் தமிழ்நாடு லோக் ஆயுக்தா" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி!




திருப்பூர் மாவட்டத்தில் இன்றைய தினம் அரசு அலுவலர்களுக்காக நடைபெற்ற "நல்லாட்சி, ஊழல் தடுப்பு மற்றும் தமிழ்நாடு லோக் ஆயுக்தா" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் லோக் ஆயுக்தாவின் தோற்றம், அமைப்பு, சட்டப்பூர்வ அதிகாரங்கள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை முறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

அரசு அலுவலர்கள் வெறும் அரசு ஊழியர்கள் அல்ல; அவர்கள் அரசின் பிரதிநிதிகளாகவும், மக்களின் சேவகர்களாகவும் உள்ளனர். ஒரு குடிமகன் அரசு அலுவலகத்திற்கு வரும் போது, அலுவலரின் மூலம் அரசையே பார்க்கிறார். எனவே, ஒவ்வொரு அலுவலரின் செயல்பாடும் அரசின் மீதான மக்களின் நம்பிக்கையை உயர்த்தவோ குறைக்கவோ முடியும். ஊழல் என்பது லஞ்சம் பெறுவதில் மட்டும் முடிவதில்லை; அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், அரசு நிதி மற்றும் சொத்துகளை முறைகேடாகப் பயன்படுத்துதல், தேவையற்ற நிர்வாகத் தாமதம், நலன் மோதல் உள்ளிட்டவையும் நல்லாட்சிக்கு எதிரானவை.

"லோக் ஆயுக்தா நிர்வாகத்திற்கு எதிரான அமைப்பு அல்ல; நேர்மையான நிர்வாகத்திற்கு ஆதரவான அமைப்பு ஆகும். நேர்மையான அலுவலர்கள் அச்சப்படத் தேவையில்லை. உண்மைக்கு புறம்பான புகார்களை அளிப்பவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் லோக் ஆயுக்தாவுக்கு இருக்கிறது. மேலும், ஒவ்வொரு மாவட்ட நிர்வாகமும் அரசு ஊழியர்களுக்கு ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் மற்றும் தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம் குறித்த பயிற்சி வழங்க வேண்டும். நுகர்வோர் மன்றங்கள் செயல்படுவதைப் போல, பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் ஒவ்வொரு ஊரிலும் ஊழல் எதிர்ப்பு மன்றங்கள் தொடங்கப்பட வேண்டும். மேலும், மாவட்ட மற்றும் மாநில அளவில் ஊழல் எதிர்ப்பு கவுன்சில்கள் அமைக்கப்பட வேண்டும். ஊழல் அதிகரித்தால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவதோடு ஏழைகளின் எண்ணிக்கை உயர்ந்து நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து விடும். தேர்தல்களில் வாக்குக்காக வழங்கப்படும் பணம், பரிசு அல்லது முறையற்ற சலுகைகளை வாக்காளர்கள் நிராகரிக்கும் நாளிலிருந்தே ஊழலுக்கு எதிரான உண்மையான போர் தொடங்குகிறது. ஊழலுக்கு எதிரான போரில் ஒவ்வொரு அரசு ஊழியரும் குடிமகனும் பங்கேற்க வேண்டும்.

உலக வங்கியின் 2025 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய ஆளுமைக் குறியீட்டு மதிப்பீட்டில், ஊழல் கட்டுப்பாட்டுக்கான நூறு புள்ளி அளவுகோலில் இந்தியா 21.4 புள்ளிகளை மட்டுமே பெற்றுள்ளது. இதேபோல், சர்வதேச வெளிப்படைத்தன்மை அமைப்பு வெளியிட்ட 2025 ஆம் ஆண்டுக்கான ஊழல் உணர்வுக் குறியீட்டில், இந்தியா நூற்றுக்கு 39 புள்ளிகளை பெற்று, கணக்கிடப்பட்ட 182 நாடுகளில் 91 ஆம் இடத்தில் இருக்கிறது. நல்லாட்சியை உருவாக்குவது அரசு அலுவலர்களின் கடமை மட்டுமல்ல. அது ஒட்டுமொத்த சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு, ஊழலைத் தடுப்பதில் ஊழல் நடைபெறாத நிர்வாகச் சூழலை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் . இவ்வாறு தமிழ்நாடு லோக் ஆயுக்தா உறுப்பினர் முனைவர்.வீ.ராமராஜ் தெரிவித்தார்கள .

# ஒரே நாடு, ஒரே சாம்பியன்ஷிப் இந்திய தேசிய கார் பந்தய சாம்பியன்ஷிப் 2026 அறிமுக விழா




சென்னை, ஆகஸ்ட். 22, 'சிடிஆர் ஜேகே டயர் எஃப்.எம்.எஸ்.சி.ஐ இந்திய தேசிய கார் பந்தய சாம்பியன்ஷிப் 2026' போட்டிக்கான அறிமுக விழா சென்னையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஏ. ஸ்ரீநாத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மேலும், எஃப்.ஐ.ஏ சர்வதேச கார்ட்டிங் கமிஷனின் தலைவரும், எஃப்.ஐ.ஏ உலக மோட்டார் ஸ்போர்ட்ஸ் கவுன்சில் உறுப்பினருமான அக்பர்இப்ராஹிம், இந்தியமோட்டார்ஸ்போர்ட்ஸ் கிளப்கள் கூட்டமைப்பின் (FMSCI) தலைவர் அரிந்தம் கோஷ், சென்னை டர்போ ரைடர்ஸின் இயக்குனர் டாக்டர் ஸ்வேதா சந்தீப் ஆனந்த், ஜே.கே . டயர்ஸ் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு இயக்குனர் ஸ்ரீனிவாசு அல்லாபன், எஃப்.எம்.எஸ்.சி.ஐ கவுன்சிலர்கள், போட்டியிடும் அணிகள் மற்றும் பல முக்கிய ஆளுமைகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். இந்நிகழ்வில் அமைச்சர் ஏ. ஸ்ரீநாத் பேசுகையில், "நாட்டில் மோட்டார் ரேஸிங் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்பதற்கும், அதே வேளையில் சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் சி.டி.ஆர் மற்றும் ஜே.கே .டயர் நிறுவனங்கள் எடுத்து வரும் தொடர் முயற்சிகளுக்கும் அர்ப்பணிப்பிற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறினார்.

மேலும் ஸ்ரீனிவாசு அல்லாபன் பேசுகையில், " இந்திய மோட்டார் விளையாட்டுத் துறையின் வளர்ச்சி மீது ஜே.கே .டயர் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க செயல்பாட்டின் மையப் புள்ளியாக ஏறக்குறைய 30 ஆண்டுகளாக இந்திய தேசிய கார் பந்தய சாம்பியன்ஷிப் போட்டி எப்போதும் இருந்து வருகிறது. பல தலைமுறைகளாக திறமையான மோட்டார் பந்தய வீரர்கள் இதில் பங்கேற்று, தங்களது திறன்களை வளர்த்துக்கொண்டு, இந்த விளையாட்டில் உயர் சாதனைகள் படைக்க இத்தொடர் சிறந்த வாய்ப்பளித்துள்ளது. 2026 சீசனை எதிர்நோக்கும் இந்த வேளையில், சென்னை டர்போ ரைடர்ஸ் மற்றும் எஃப்.எம்.எஸ்.சி.ஐ ஆகிய அமைப்புடன் இணைந்து செயல்படுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். புதிய திறமையாளர்களுக்கு கூடுதல் வாய்ப்புகளை உருவாக்கவும், போட்டிகளின் தரத்தை உயர்த்தவும், இந்தியாவில் மோட்டார்விளையாட்டுத் துறையின் தொடர் வளர்ச்சிக்கு பங்களிக்கவும் நாங்கள் உறுதியுடன் செயல்படுவோம்" என்று தெரிவித்தார்.

# வந்தவாசியில் விநாயகர் சிலைகள் செய்யும் பணிகள் ஜோர்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி நகரில் விநாயகர் சிலைகள் செய்யும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. வரும் செப்டம்பர் 14 ஆம் தேதி விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற உள்ளதால் பல்வேறு நிலைகளில் விநாயகர் சிலைகள் அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் அரசின் உத்தரவுக்கிணங்க குறிப்பிட்ட அடி உயரமுள்ள காகித கூழ்களால் ஆன விநாயகர் சிலைகள் தண்ணீரில் கரையும் வண்ணம் செய்யப்பட்டு வருகிறது. விநாயகர் சதுர்த்தி நடைபெற இன்னும் குறைந்த நாட்களே உள்ள நிலையில் இந்த பணி முழுமூச்சாக நடைபெற்று வருகிறது. மேலும் விநாயகர் சிலையை வாங்க கிராமப் பகுதிகளில் இருந்து இளைஞர்கள் பார்வையிட்ட வண்ணம் உள்ளனர்.

# தனியார் வாகன ஓட்டுனராக பணிபுரியும் தவெக கிளைச் செயலாளர் மோட்டார் சைக்கிள் விபத்தில் பலி

திருவள்ளூர் அடுத்த வரதாபுரம் கிராமத்தை சேர்ந்தவர் வெங்கடேசன்.

இவரது மகன், தவெக கிளைச் செயலாளர் மதுரைய்யா (30). இவர் தனியார் வாகன ஓட்டுனராக வேலை செய்து வந்தார் இந்நிலையில் நேற்று கனகம்மா சத்திரத்தில் இருந்து இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது முத்துக்கொண்டாபுரம் வரும் பொழுது தவறி விழுந்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதில் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது அப்பொழுது மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறியுள்ளனர் வரும் வழியிலேயே



இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறினர். கனகம்மா சத்திரம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் 120ம் பிறந்த தினம்; கலெக்டர் மரியாதை

நாகர்கோவில், ஆக.22

பொதுவுடமை வீரர் ப. ஜீவானந்தம் 120வது பிறந்தநாள் முன்னிட்டு, கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின்கீழ், நாகர்கோவில், வேப்பமூடு சந்திப்பில் அமைந்துள்ள ஜீவா நினைவு மண்டபத்திலுள்ள, அன்னாரது திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் :

பொதுவுடமை வீரர் ப.ஜீவா 21.08.1907ம் நாள் பிறந்தார். கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி தொடக்கப்பள்ளியில் பள்ளிப்படிப்பை பயின்ற பின்னர், கோட்டார் உயர்நிலைப்பள்ளியில் பயின்றார். புரட்சிகரமான கொள்கைகளாலும், சமுதாயத்தொண்டால், இலக்கிய சேவையால்,



சுதந்திரப்போராட்ட தியாகத்தால் குமரிக்கு தனிப்பெருமை சேர்த்தவர் எனும் புகழுக்குரியவர். 1955ம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக செனட் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். கன்னியாகுமரி மாவட்ட இணைப்பு போராட்டத்தில் தீவிர பங்குபெற்ற ப.ஜீவானந்தம் 18.01.1963ம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார். அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நாகர்கோவில் மாநகராட்சி மேயர் எம்.மேரிபிரின்சி லதா (பொ), நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் வேல்முருகன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண் ஜெகத்பிரைட், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் ஆறுமுகம், நாகர்கோவில் மாநகராட்சி உறுப்பினர் விஜிலா ஜஸ்டஸ், மாதவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு




திருப்பத்தூர்:ஆக:22,

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டாரத்திற்கு உட்பட்ட 250க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரிகளில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை வட்டார போக்குவரத்து அலுவலர் பன்னீர் செல்வம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியானது கல்லூரியின் துணை முதல்வர் தியோபில் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழ்நாடு போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி அரங்கில் திரை மூலமாக தமிழ்நாட்டில் நடைபெறும் சாலை விபத்துகள், எதனால் ஏற்படுகிறது, சாலை விதிகளை எவ்விதம் கடைபிடிக்க வேண்டும், அதிவேகமாக செல்வதால் ஏற்படும் விளைவுகள், சாலையை கடக்கும் போது கவனிக்க வேண்டியவை, அலைபேசி பயன்படுத்திக்கொண்டு வாகனத்தை ஏற்படும் உயிர் சேதங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைத்து திரை மூலமாக வீடியோ மற்றும் கருத்து படங்களின் மூலம் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் பன்னீர் செல்வம் விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். மேலும் இந்நிகழ்ச்சியில், ஜெ சி ஐ திருப்பத்தூர் எக்செல் தலைவர் தேவேந்திரன் நிகழ்ச்சி குறித்து அறிமுகவுரை செய்தார். இந்நிகழ்ச்சியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்று சிறப்பித்தனர். மேலும், தொண்ணூறு நாட்களில் ஒரு லட்சம் பேருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியது பொதுமக்கள் மத்தியில் பெரிதும் பாராட்டினை பெற்றுள்ளது.

# மண்டல அளவிலான கோகோ விளையாட்டுப் போட்டியில் செய்யது அம்மாள் பப்ளிக் பள்ளி மாணவ,மாணவிகள் சாதனை

## தாளாளர்கள் செல்லத்துரை அப்துல்லா, ராஜாத்தி அப்துல்லா வாழ்த்தினர்!

ராமநாதபுரம், ஆக. 22

மதுரை சகோதயா பள்ளி கூட்டமைப்பு சார்பில் 2026 27ம் ஆண்டிகான மண்டல அளவிலான கோகோ விளையாட்டு போட்டிகள் ராமநாதபுரம் செய்யது அம்மாள் பப்ளிக் பள்ளியில் மிக பிரமாண்டமாக நடைபெற்றது. போட்டி தொடரின் தொடக்க விழாவிற்கு சிறப்பு விருந்தினராக செய்யது அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தாளாளர் செல்லத்துரை அப்துல்லா, செய்யது அம்மாள் பப்ளிக் பள்ளியின் தாளாளர் ராஜாத்தி அப்துல்லா பள்ளியின் முதல்வர் பார்வதி பிள்ளை, துணை முதல்வர் விசாலாட்சி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். போட்டிகளை சிறப்பு விருந்தினர்கள் தொடங்கி வைத்து வீராங்கனைகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். பள்ளி கூட்டமைப்பு மண்டலத்திற்குட்பட்ட பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 23 பள்ளிகளின் மாணவ மாணவிகள் போட்டியில் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். இப் போட்டியில் 17 வயதிற்கு கீழ் பட்ட மாணவ மாணவிகளின் பிரிவில் விளையாடி செய்யது அம்மாள் பப்ளிக் பள்ளி மாணவர்கள் முதல் பரிசை பெற்று சாதனை புரிந்தனர்.

சாதனை புரிந்த மாணவ மாணவிகளை சிறப்பு கல்லூரி தாளாளர் செல்லத்துரை அப்துல்லா பள்ளியின் தாளாளர் ராஜாத்தி அப்துல்லாமற்றும்சிறப்பு விருந்தினர்கள் பாராட்டி கௌரவித்தனர்.



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (21.08.2026) விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ்,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர்(வ) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் உள்ளனர்.

# புதூர் வேளாண்துறை அலுவலகத்தை முற்றுகையிட்ட விவசாயிகள்



விளாத்திகுளம், ஆகஸ்ட் 22:

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே புதூர் வட்டார விவசாயிகள் சங்கத்தினர், வறட்சியால் ஏற்பட்ட பயிர் இழப்புக்கு இழப்பீடு மற்றும் பயிர் காப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மிளகாய், கொத்தமல்லி, சோளம், கம்பு, மக்காச்சோளம், சூரியகாந்தி உள்ளிட்ட பயிர்களுக்கு அரசு விலை நிர்ணயம் செய்ய வேண்டும், பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், கண்மாய் மற்றும் ஊரணிகளில் வண்டல் மண், கரிசல் மண் எடுக்க விவசாயிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும், வனவிலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்தை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தனர்.

புதூர் பேருந்து நிலையம் முன்பு சாலை மறியல் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், போலீசார் விவசாயிகளை வேளாண்மைத் துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். காலை 10 மணிக்கு சென்ற விவசாயிகள், அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு வராததால் கண்டன கோஷங்களை எழுப்பினர். பின்னர் தர்ணாவில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், காவல் துறை மற்றும் காப்பீட்டு நிறுவன அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். விவசாயிகளின் குறைகளை கேட்ட அதிகாரிகள், 10 நாட்களுக்குள் பயிர்காப்பீட்டுத் தொகை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். இதையடுத்து விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# விபத்து இல்லாத குமரி எஸ் பி ஸ்டாலின் முயற்சியும், போக்குவரத்து காவல்துறையின் பங்களிப்பும் : ஒரு பார்வை

நாகர்கோவில் ஆக 22

கன்னியாகுமரி மாவட்டத்தை விபத்தில்லா மாவட்டமாக மாற்றுவதற்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் எடுத்து வரும் முன்னெச்சரிக்கை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளைமாவட்டம் முழுவதும் போலீசார் தீவிரப்படுத்தி வருவதுடன் தலைக்கவசம் அணிவதின் அவசியம் குறித்த விழிப்புணர்வை இருசக்கர வாகனங்களில் பயணம் செய்யும் இருவரும் பின்பற்றவும் நடவடிக்கையை எடுத்து வருகின்றனர்.

மேலும் விபத்து மரணங்களை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கையை தீவிரப்படுத்த நாகர்கோயில் போக்குவரத்து ஒழுங்கு பிரிவு ஆய்வாளர் அருண் தலைமையிலான போக்குவரத்து உதவி ஆய்வாளர் அசோக் மற்றும் போலீசார் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டும், போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படாத வண்ணம் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதிலும், பாதசாரிகள் தடையில்லாமல் நடந்து செல்ல நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுப்பது மட்டுமல்லாமல், சாலை ஓரங்களில் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை அப்புறப்படுத்துவதிலும் தீவிர கவனம் செலுத்தி போக்குவரத்து இடையூறு இல்லாத படி தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருவதால் விபத்துக்கள் தடுக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்து காவல்துறையினரின் இத்தகைய விழிப்புணர்வு நடவடிக்கையால் பொதுமக்கள் போக்குவரத்து விதிமுறைகளை அறிந்து பின்பற்றி தற்போது இருசக்கர வாகனங்களில் இருவராக வரும்போது இருவரும் தலைக்கவசம் அணிந்து வருகின்றனர்.



இதனை பாராட்டும் வகையில் பொதுமக்களுக்கு மாவட்ட காவல்துறை சார்பில் இனிப்பு மற்றும் புத்தகங்கள் பரிசாக வழங்கி கௌரவித்தும் வருகிறது.

நாகர்கோவில் மாநகர் பகுதிகளில் முன்பு எப்போதும் இல்லாத அளவில் நடைபாதை ஆக்கிரமிப்புகள் முற்றிலுமாக தடுக்கப்பட்டு பொதுமக்கள் நடைபாதைகளில் நடந்து செல்ல இடையூறு இல்லாமல் தினந்தோறும் போக்குவரத்து காவல்துறையால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல் போக்குவரத்திற்கு இடையூறாக சாலை ஓரங்களிலும், நோ பார்க்கிங் பகுதிகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு அபராதம் விதித்தும் எச்சரிக்கை செய்தும் போக்குவரத்து காவல்துறையால்எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையால் சாலை ஓரங்களில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவது வெகுவாக குறைந்து உள்ளது.

மேலும் பள்ளி மற்றும் கல்லூரி பயிலும் மாணவ மாணவியர் போக்குவரத்து நெருக்கடியில் சிக்கி தவிக்காத படி காலை மற்றும் மாலை வேளைகளில் மாவட்ட காவல் துறையினர் முக்கிய பகுதிகளில் நின்று போக்குவரத்து நெருக்கடி ஏற்படாதபடி போக்குவரத்தை சீர் செய்து வருகின்றனர். இதனால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் சரியான நேரத்திற்கு தங்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு செல்லவும், அலுவலகங்களில் பணி செய்பவர்களும் நேரத்திற்கு பணிக்கு செல்ல காவல்துறையினர் பெரிதும் உதவி செய்து வருகின்றனர்.

மாவட்ட எஸ்பி ஸ்டாலின் நடவடிக்கையால் நாகர்கோவில் மாநகர் பகுதிகளில் கனரக வாகனங்கள் எளிதாக வருவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டு கனரக வாகனங்களால் ஏற்பட்டு வந்த விபத்துக்கள் முற்றிலுமாக தடுக்கப்பட்டு உள்ளது.

மேலும் நாகர்கோவில் மாநகர் பகுதி மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் பகுதிகளான பேருந்து நிலையம், வழிபாட்டு தலங்கள், மண்டபங்கள், பள்ளி, கல்லூரிகள், முக்கிய சந்திப்புகள் போன்ற பகுதிகளில் மாவட்ட காவல் துறையால் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் திருட்டுகள் தடுக்கப்படுவதுடன், போக்குவரத்து விதி மீறல்களும் கண்டறியப்பட்டு நடவடிக்கையை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் மாவட்டத்தில் குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் சிசிடிவி கேமரா செயல்பாட்டாலும், காவல்துறையின் அதி தீவிர நடவடிக்கையாலும் போக்குவரத்து விதிமீறல்கள் கணிசமாக குறைந்து பொதுமக்கள் வாகன பயணத்தின் போதும், நடை பயணத்தின் போதும் எந்தவித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் நிம்மதியுடன் சென்று வருகின்றனர்.

நாகர்கோவில் போக்குவரத்து ஒழுங்கு பிரிவு போலீசார் தொடர்ந்து ஏற்படுத்தி வரும் விழிப்புணர்வாலும் இனி வரும் நாட்களில் குமரி மாவட்டத்தில் குற்ற சம்பவங்கள் முற்றிலுமாக தடுக்கப்பட்டு வாகன ஓட்டிகள் அனைவரும் போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றி குமரி மாவட்டத்தை விபத்து இல்லாத மாவட்டமாக மாற்றும் எஸ்பி ஸ்டாலினின் தீவிர முயற்சிக்கு உறுதுணையாக இருந்து மாற்றத்தை கொண்டு வருவார்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.

# தஞ்சை மீனாட்சி மருத்துவமனையில் அரிய கட்டிகள் அகற்றம்

தஞ்சாவூர், ஆகஸ்ட் 21

தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் 3 நோயாளிகளுக்கு மண்டையோட்டின் அடிப்பகுதியில் பரவியிருந்த அரிய மற்றும் வீரியமிக்க கட்டிகள், நரம்பியல் மற்றும் காது, மூக்கு, தொண்டை (ENT) துறைகளின் ஒருங்கிணைந்த அறுவைசிகிச்சை மூலம் வெற்றிகரமாக அகற்றப்பட்டன.

மூக்கு மற்றும் அதனைச் சுற்றிய பகுதிகளில் இருந்து மண்டையோட்டின் அடிப்பகுதி மற்றும் மூளைப்பகுதி வரை பரவியிருந்த கட்டிகளை, மூக்கு வழியாக எண்டோஸ்கோப் மற்றும் மண்டையோடு வழியாக மைக்ரோஸ்கோப் பயன்படுத்தி மருத்துவர்கள் அகற்றினர். அறுவைசிகிச்சைக்குப் பிறகு மூளையையும் மூக்குப் பகுதியையும் பிரிக்கும் மண்டையோட்டின் முன்பகுதி சீரமைக்கப்பட்டு, மூளை த்தண்டுவட நீர் கசிவு மற்றும் தொற்று ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டது.




50 வயது பெண்ணுக்கு 10×10 செ.மீ அளவிலான ஆல்ஃபாக்டரி எஸ்தீசியோநியூரோபிளாஸ்டோமா கட்டியும், 40 வயது ஆணுக்கு 9×7 செ.மீ அளவிலான அதே வகை கட்டியும் கண்டறியப்பட்டன. 36 வயது பெண்ணுக்கு 12×10 செ.மீஅளவிலானசைனோநேசல்கார்சினோமாகட்டி இருந்தது. தலா 10 முதல் 15 மணி நேரம் நடைபெற்ற சிக்கலான அறுவைசிகிச்சைகளை டாக்டர்கள் N. அருண்குமார், V. ஸ்ரீ பிரியதர்ஷன், ஐசக் ரிச்சர்ட்ஸ் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர். துல்லியமாக கட்டிகளை அகற்ற CUSA எனப்படும் அதிநவீன அல்ட்ராசோனிக் கருவியும் பயன்படுத்தப்பட்டது. மூன்று நோயாளிகளும் நரம்பியல் பாதிப்பின்றி சிகிச்சை பெற்றுள்ளனர்.

# நாகர்கோவில் பஸ் நிலையத்தில் ஐடிஐ மாணவரை அரிவாளால் வெட்டி கொலை முயற்சி;சிறார்கள் 2 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், ஆக. 22

மணவாள குறிச்சியை அடுத்த அம்மாண்டிவிளை பகுதியை சேர்ந்த 16 வயது இளம் சிறார் ஒருவர் நாகர்கோவில் கோணம் ஐடிஐ கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். இவர் தனது நண்பர்களுடன் நாகர்கோவில் மீனாட்சிபுரம் பஸ் நிலையத்தில் பஸ்சுக்காக நிற்பது வழக்கம். அந்த சமயத்தில் இவர்களுக்கும் கோட்டாறு வேதநகர் பகுதி சேர்ந்த இளம் சிறார்கள் இடையே தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்தது

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் இவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதில் வேத நகர் பகுதியை சேர்ந்த இளம் சிறார்கள் 2 பேர் சேர்ந்து ஐடிஐ மாணவரைஅறிவாளால்வெட்டமுயன்று, பஸ் நிலையத்தில் துரத்தினர். இதில் அவர் உயிர் தப்பினார். பயணிகள் மத்தியில் நடந்த மோதல் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இது குறித்து கோட்டாறு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது

புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வேதநகர் பகுதியை சேர்ந்த இளம் சிறார் மற்றும் இருளப்பபுரம் பகுதியை சேர்ந்த இளம் சிறார் ஆகிய இரண்டு பேர் மீது கொலை முயற்சி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# நல்ல பழக்க வழக்கங்களை வளர்த்துக் கொண்டு போதை பொருள்களில் இருந்து மாணவர்கள் விலகி இருக்க வேண்டும்!

## டி ஐ ஜி ஜியாவில் ஹக் பேச்சு!!



தஞ்சாவூர் ஆகஸ்ட் 22 நல்ல பழக்கவழக்கங்களைவளர்த்துக்கொண்டு போதைப் பொருள்களில் இருந்து மாணவர் கள் விலகி இருக்க வேண்டும் என்று தஞ்சாவூர் சரக டிஐஜி ஜியாவுல் ஹக் கூறினார்

தஞ்சாவூர் மாவட்ட போலீஸ் துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கான போதை பொருள் விழிப்பு ணர்வு நிகழ்ச்சி தஞ்சாவூரில் நடைபெற்றது

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தர வதனம் தலைமை தாங்கினார் .மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி பேபி முன்னிலை வகித்தார். தஞ்சாவூர் சரக டிஐஜி.ஜியாவுல் ஹக்சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது.

மாணவர்கள் நல்ல பழக்க வழக்க ங்களை வளர்த்துக் கொண்டு, ஒழுக்கத்துடனும், பொறுப்புடனும், செயல்பட வேண்டும்.போதைப் பொருள்களின் தீமைகள் குறித்து விழிப்புணர்வுடன் இருந்து, அவற்றி லிருந்து முற்றிலும் விலகி இருக்க வேண்டும்.பள்ளிகளில் செயல் படும் போதைப் பொருள் தடுப்பு போன்ற அமைப்புகளில் ஆர்வத்துடன் பங்கேற்று போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

தனிப்பட்ட புகைப்படங்கள் வீடியோக்கள் மற்றும் முக்கியமான தகவல்களை அறிமுகம் இல்லாத நபர்களிடம் பகிரக்கூடாது. நேர மேலாண்மையை கடைப்பிடித்து கல்வி ,விளையாட்டு மற்றும் தனித்திறன் வளர்ப்பு நடவடிக்கை க்கு உரிய நேரத்தை ஒதுக்குவது அவசியம்.

இவ்வாறு அவர் கூறினார்

மாவட்டகாவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் பேசுகையில் :

மாணவர்கள் தங்களது எதிர்கால த்தை சிறப்பாக அமைத்துக் கொள் ள தற்போதைய நல்ல பழக்க வழக் கங்களையும் ,ஒழுக்கத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். போதைப் பொருள்களை பயன்படு த்துவதால் ஏற்படும் உடல், மன மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்

போதைப் பொருள்கள் கல்வி மற்றும் எதிர்கால வாழ்க்கையை கடுமையாக பாதிக்கும் என்பதால்,அவற்றைமுற்றிலும் தவிர்க்க வேண்டும். மாணவர்கள் கல்வியுடன், விளையாட்டு மற்றும் பல்வேறு இணைப்பு நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும் பள்ளி மாணவர்களிடையே ஏற்படும் தேவையற்ற மோதல்களை தவிர்த்து சக மாணவர்களுடன் ஒற்றுமையுடன் நல்லிணக்கத்துட ன் பழக வேண்டும். ஒழுக்கம், கடின உழைப்பு, நேர மேலாண்மை மற்றும் நல்ல நடத்தை ஆகியவை எதிர்கால வெற்றிக்கு அடித்தள மாகும். என்றார்

# கிராமப்புறங்களில் இணைய வசதி வழங்க தொழில் பங்குதாரர்கள் தேர்வு

தஞ்சாவூர், ஆகஸ்ட் 22 தஞ்சாவூர் மாவட்டத்தில் கிராமப்புறங்களுக்கு உயர்தர இணைய வசதி வழங்க தொழில் பங்குதாரர்கள் தேர்வு செய்யப்பட உள்ளதாக மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம், பாரத் நெட் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் தடையில்லா இணைய சேவை வழங்க மாவட்ட அளவில் தொழில் பங்குதாரர்களை தேர்வு செய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பாரத் நெட் பணிகள் 100 சதவீதம் நிறைவடைந்துள்ளன. தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை வருவாய் கோட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 3 துணைப்பிரிவுகளாக பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் குறைந்தது 2 தொழில் பங்குதாரர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். விண்ணப்பதாரர்கள் அதிகபட்சம் 2 மாவட்டங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

தேர்வு செய்யப்படும் பங்குதாரர்கள் இணைய சேவையை தடையின்றி வழங்குதல், பழுதுகளை விரைந்து சரிசெய்தல், விதிமுறைகளை பின்பற்றுதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும். விண்ணப்பங்கள் [tanfinet.tn.gov.in இணையதளம்](https://tanfinet.tn.gov.in?utm_source=chatgpt.com) மூலம் பெறப்படுகின்றன. ஒவ்வொரு துணைப்பிரிவுக்கும் ரூ.25 ஆயிரம் திரும்பப்பெறக்கூடிய வட்டி இல்லா விண்ணப்ப பாதுகாப்புத் தொகை செலுத்த வேண்டும். தேர்வு செய்யப்படுவோர் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ.2 லட்சம் பாதுகாப்புத் தொகை செலுத்திய பின்னர் பணி ஆணை வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் ஆகஸ்ட் 26, 2026க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

# நீட் தேர்வில் வெற்றி பெற்ற அரசு பள்ளி மாணவிக்கு குமரி மேற்கு மாவட்ட பாஜக சார்பில் பாராட்டு



மார்த்தாண்டம், ஆக.22 களியக்காவிளை அருகே படந்தாலுமூடு பகுதியில் கார் மெக்கானிக் தொழில் செய்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவி அதுல்யா என்பவர் அரசு பள்ளியில் 12ஆம் வகுப்பு வரை கல்வி பயின்று, நீட் தேர்வில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்று ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

மருத்துவராக வேண்டும் என்ற இலக்குடன் சிறு வயது முதலே தன்னைத் தயாரிப்படுத்தி வந்த மாணவி அதுல்யா, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 578 மதிப்பெண்கள் பெற்று பள்ளியின் சிறந்த மாணவியாகத் திகழ்ந்தார். தொடர்ந்து நீட் தேர்விற்கும் தீவிரமாகத் தயாராகி, தற்போது அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயிலும் வாய்ப்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மாணவி அதுல்யாவின் இந்த சிறப்பான சாதனையைப் பாராட்டும் வகையில், பாரதிய ஜனதா கட்சி கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தின் சார்பில் பாராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

மேற்கு மாவட்டத் தலைவர் ஆர்.டி. சுரேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாணவிக்கு வாழ்த்துகளும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மேற்கு மாவட்ட பொதுச்செயலாளர் நந்தினி, கல்வியாளர் பிரிவு மாவட்டத் தலைவர் பேராசிரியர் சக்திபிரசாத், மண்டல் தலைவர் சரவண வாசு நாராயணன், மண்டல் பொதுச்செயலாளர் சுரேஷ்குமார் உள்ளிட்ட பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மாணவிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

நிகழ்வில் பேசிய மாணவி அதுல்யா, “நீட் தேர்வு இருந்த போதிலும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த எனக்கும் மருத்துவம் போன்ற உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளது” என்று பெருமையுடன் தெரிவித்தார்.

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் அரசு பள்ளியில் பயின்று, தனது கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் மருத்துவக் கல்வியில் இடம் பெற்றிருப்பது, அரசு பள்ளி மாணவர்களுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது.




திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி அருகில், தமிழ்நாடு அரசு உயர் கல்வித்துறை சார்பில், மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன்நாட்றம்பள்ளிஅரசினர்தொழிற்பயிற்சிகல்லூரிமுதல்வர்பூங்கோதைமற்றும்பேராசிரியர்கள் உள்ளனர்.

# தேங்காய்பட்டணத்தில் சுற்றுலா வளர்ச்சி திட்ட பணிகள்; கலெக்டர் ஆய்வு




புதுக்கடை, ஆக.22 குமரி மாவட்டம் தேங்காய் பட்டணம் கடற்கரை பகுதி மிகச் சிறந்த சுற்றுலா தலமாகும். தேங்கா பட்டணம் என்ற பெயருக்கு ஏற்ற வகையில் இந்த கடற்கரையில் பல கிலோ மீட்டர் தூரங்கள் தென்னை மரங்களாக காட்சியளித்தது. கடலோடு சேர்ந்த தென்னை தோப்பில் தினமும் நூற்றுக் கணக்கான சுற்றுலா பயணிகள் அங்கு வந்து இளைப் பாறி செல்வது வழக்கம்.

மட்டுமின்றி தேங்காபட்டணம் கடலுடன் கோதையாறு கலக்கும் கழிமுக பகுதி மிகவும் பிரபலமான இடம் ஆகும். ஆனால் பிற் காலத்தில் தேங்கா பட்டணம் மீன்பிடி துறைமுக பனிகள் ஆரம்பித்து, துறைமுகம் செயல்பாட்டுக்கு வந்த பின் கடற்கரை தென்னம் தோப்புகள் காணாமல் போனது. இருப்பினும் தற்போதும் இந்த கடற்கரை பகுதிக்கு உள்ளூர் வெளியூர் சுற்றுலா பயணிகள் வந்து செல்வது வழக்கம். ஆனால் கடற்கரையில் சுற்றுலா பயணிகளுக்கான எந்த வாய்ப்புகளும் இல்லாமல் உள்ளது.

எனவே தேங்காபட்டணம் கடற்கரையை சிறந்த சுற்றுலா தலமாக மாற்ற வேண்டும் என பொதுமக்கள் விடுத்த கோரிக்கையின் பேரில் தமிழக சட்டமன்ற கூட்டத்தில்சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் 20262027ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையில், தேங்காபட்டணம் கடற்கரை பகுதியை மேம்படுத்த ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்தார். அதனடிப்படையில் இத்திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிப்பது தொடர்பாக, நேற்று தேங்காய்பட்டணம் கடற்கரைப் பகுதியில் மாவட்ட ஆட்சி தலைவர் பிரதாப் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தேங்காய்பட்டணம் கடற்கரைக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும், அவர்களுக்குத் தேவையான அடிப்படை மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை உறுதி செய்யும்வகையில்சுற்றுலா வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனதுறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. குறிப்பாக சிறுவர்களுக்கான நவீன விளையாட்டுப் பூங்கா மற்றும் மூங்கில் வளைவுகளுடன் கூடிய அழகிய குடில்கள், கடற்கரைப் பகுதியை இரவிலும் மிளிரச் செய்யும் அலங்கார மின்விளக்குகள் மற்றும் நடைபாதை வசதிகள், சுற்றுலாப் பயணிகள் அமர்ந்து ரசிக்க இருக்கை வசதிகள், நவீன கழிப்பறைகள் மற்றும் தூய்மையான குடிநீர் வசதி, கடற்கரையை எளிதில் சென்றடைய தரமான அணுகுசாலை, பரந்த வாகன நிறுத்துமிடம் மற்றும் உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்பு பணிகளுக்கான விரிவான திட்ட மதிப்பீட்டை விரைந்து தயார் செய்து சமர்ப்பிக்குமாறு மாவட்ட சுற்றுலா அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், கிள்ளியூர் வட்டாட்சியர் ராஜசேகர், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



# நலம் தரும் நெமிலி ஸ்ரீ பாலா பீடத்தில் வரலட்சுமி விரத பூஜை

ராணிப்பேட்டை ஆக 22 ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி பகுதியில் அமைந்துள்ள நெமிலி ஸ்ரீ பாலா பீடத்தில் வரலட்சுமி விரத பூஜை சிறப்பாக நடைபெற்றது.

இந்த வரலட்சுமி பூஜையை முன்னிட்டு கலச ஆவாகனம் செய்து பூஜையை தொடங்கி வைத்தார் நெமிலி ஸ்ரீ பாலா பீடாதிபதி அம்மா நாகலட்சுமி அம்மாவுடன் இணைந்து பாலா பீடத்தின் சுமங்கலிகள் அனைவரும் ஒன்றிணைந்து பூஜைகளை சிறப்பாக நடத்தினர்

அனைவரும் பூஜையின் முடிவில் நோன்பு பெயரை கட்டிக்கொண்டனர் முன்னதாக பாலா பீட நிர்வாகி மோகன் ஜி கலசத்திற்கு அலங்காரம் செய்தார் குருஜி பாபாஜி வரலட்சுமி விரத பாடல்களை பாராயணம் செய்தார் பாலா விடாதிபதி அவர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்க முரளிதரன் முன்னிலையில் அன்னதானம் நடைபெற்றது.



ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி தாலுகாவில் உள்ள நியாய விலை கடைகளில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக பில் போடும் இயந்திரம் (POS) நெட்வொர்க் பிரச்சனைகள் வில் போட முடியாமல் சிரமத்திற்கு உள்ளாகியும் கடை ஊழியர்களும் நுகர்பொருள் பயனளிகளும் அடிக்கடி வாக்குவாதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

இந்த நிலையில் அனைத்து கடை சேல்ஸ்மேன்களும் வட்டாட்சியர்அலுவலகத்தில்வட்டஅலுவலரிடம்முறையிட்டு சரி செய்து தருமாறு இயந்திரங்களை ஒப்படைத்து சரி செய்து தருமாறு மனு அளித்தனர்



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மாவட்ட வருவாய் அலுவலர் / செயலாட்சியர் இராஜலட்சுமி, வேளாண்மை இணை இயக்குநர் மணி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.இளவரசன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் தீபா, உதவி இயக்குநர்கள் ஊராட்சிகள் மகாதேவன், முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) (பொ) அப்துல்ரஹ்மான், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# செந்தில் நகர் ஸ்ரீ மஹா மாரியம்மன் கோயில் தீர்த்தக்குடம், முளைப்பாரி ஊர்வலம்



தருமபுரி ஆகஸ்ட் 22 தருமபுரி மாவட்டம், இலக்கியம்பட்டி ஊராட்சி செந்தில் நகரில் எழுந்தருளியுள்ள அருள் மிகு ஸ்ரீ செல்வ விநாயகர், ஸ்ரீ செந்தில் பாலமுருகன், ஸ்ரீ நவகிரகங்கள், ஸ்ரீ நாகர்கள் மற்றும் ஸ்ரீ மஹா மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக விழா நடைபெற உள்ளது. இதையொட்டி, ஆகஸ்ட் 21ஆம் தேதி வெள்ளிக்கிழமை ஸ்ரீ மஹா கணபதி, ஸ்ரீ செந்தில் பாலமுருகன், ஸ்ரீ நாகர்கள், ஸ்ரீ மஹா மாரியம்மன் சுவாமிகள் மற்றும் தீர்த்தக்குடம், முளைப்பாரி ஆகியவற்றை ஸ்ரீ மஹா கணபதி ஆலயத்தில் இருந்து பக்தர்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்று ஸ்ரீ மஹா மாரியம்மன் திருக்கோயிலை வந்தடைந்தனர். தொடர்ந்து, ஆகஸ்ட் 22 ஆம் தேதி சனிக்கிழமை காலைகணபதி ஹோமம், நவகிரக ஹோமம், குபேர லட்சுமி பூஜைகள் நடைபெற உள்ளன. இதையடுத்து, ஆகஸ்ட் 23ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் கால யாக பூஜைகளைத் தொடர்ந்து, ஸ்ரீ செல்வ கணபதி, ஸ்ரீ செந்தில் பால முருகன், ஸ்ரீ பரிவார மூர்த்திகள், ஸ்ரீ மஹா மாரியம்மன் மற்றும் கோபுர கலசத்திற்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

மஹா கும்பாபி ஷேகத்தைத் தொடர்ந்து மாரியம்மனுக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் மஹா தீபாராதனை நடைபெறும். இரவு மண்ணேசுவரர் மற்றும் உலகநாயகி மஹா மாரியம்மனுக்கு திருக்கல்யாண வைபவம் வெகு விமரிசையாக நடைபெற உள்ளது. விழாவின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பக்தர்களும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு அம்மன் அருள் பெறுமாறு திருக்கோயில் நிர்வாகம் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கௌரவ தலைவர் குப்புசாமி, தலைவர் செந்தில்குமரன், செயலாளர் பூபதி, பொருளாளர் சித்தேசன், துணைத்தலைவர்கள் கந்தசாமி, ராஜி, துணைச் செயலாளர்கள் கண்ணபிரான், இளங்கோவன், தணிக்கை குழுவினர் அப்பாவு, வடிவேலன் மற்றும் திருக்கோவில் நிர்வாக குழுவினர்,விழாகுழுவினர், ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்து வருகின்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், பையூர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் மண்டல வேளாண் ஆராய்ச்சி மையத்தில், வேளாண்மைத்துறை சார்பாக, விவசாயிகள்குறைதீர்க்கும்நாள்கூட்டம்மாவட்டஆட்சித்தலைவர்.ச.தினேஷ்குமார்தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .த.மஞ்சுளா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .உமா மகேஸ்வரி, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர்.மு.சை.அனீசாராணி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) .உமா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) .ஏஞ்சலின் பொன்ராணி மற்றும் விவசாய பெருமக்கள் உள்ளனர்.

# அரசு தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியை மாணவர்களை வைத்து மசாஜ் செய்த சம்பவம் அதிகாரிகள் விசாரணை

கருங்கல், ஆக.22 கருங்கல் அருகே செல்லங்கோணம் அரசு தொடக்கப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களை, தலைமை ஆகிரியை தனது சுய வேலைகளுக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, வகுப்பறையில் ஆசிரியை அமர்ந்திருக்கும் போது, மாணவர்களைத் தனது கால்களை மசாஜ் செய்ய கட்டாயப் படுத்தியுள்ளார். மேலும் பள்ளி வளாகத்தில் உள்ள கழிவறையையும் மாணவர்களைக் கொண்டு சுத்தம் செய்ய வைத்துள்ளார்.

இது குறித்து மாணவர்கள் வீட்டில் பெற்றோரிடம் தெரிவித்தால், கடுமையான தண்டனை வழங்கப்படும் என மாணவர்களை அந்த ஆசிரியை மிரட்டியதாகவும் தெரிகிறது. இதனால் பயந்து போன மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல மறுத்துள்ளனர். பெற்றோர்கள் தொடர்ந்து விசாரித்த போது தான், பள்ளியில் நடக்கும் இந்த அதிர்ச்சி உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

இது குறித்து பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளிக்குச் சென்று சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியையிடம் நேரடியாகக் கேள்வி எழுப்பினர். அப்போது, ‘பிஞ்சுப் பிள்ளைகளைக் கொண்டு கால் தடவ வைக்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது?’ என்று பெற்றோர் ஆவேசமாகக் கேட்டனர்.

அதற்கு அந்த ஆசிரியை முன்னுக்குப் பின் முரணான பதில்களைக் கூறி மழுப்புகிறார். பின்னர் தலைமை ஆசிரியை தனது செயலுக்கு வருத்தமும் தெரிவிக்கிறார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களிலும் பரவி வருகிறது.

இந்தச்சம்பவம் தொடர்பாகப் பெற்றோர்கள் ஒன்றிணைந்து பள்ளி கல்வித்துறைக்கு புகார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அதன் பேரில் நேற்று மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பள்ளிக்கு சென்று விசாரணை நடத்தினர். இந்த புகார் குறித்த குற்றம் நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.